## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 82/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சீதாராமையர் | நாள் | 06.09.2022 |
| தகப்பனார் பெயர் | சஞ்சீவி அய்யர் (எ) அன்னு அய்யர் | | |

**4 ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை:–**

1) தாவா கோவிலின் மீது பாரம்பரியமாக மொத்தம் எத்தனை கரை (குடும்பங்கள்)–க்கு உரிமை உள்ளது என்றால், மொத்தம் 6 குடும்பங்களுக்கு பூஜை செய்யும் உரிமை, தட்டுக்காணிக்கை உரிமை, அர்ச்சனை காணிக்கை உரிமை, முடிக்காணிக்கை உரிமை, பசுமாடு காணிக்கை பெறும் உரிமை, பிரசாதம் வழங்கும் உரிமை, மடிப்பணம் பெறும் உரிமை, சாமி ஊர்வலம் செல்லும் உரிமை ஆகியவை உள்ளன.

2) மேற்படி 6 குடும்பங்கள் யார் யார் என்றால், 1) சின்ன தாத்தா பூஜை, 2) சேஷய்யர் வகையறா, 3) சீதாராமன் வகையறா ( எங்கள் சொந்த பூஜை), 4) குப்புசாமி வகையறா, 5) 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் குமார் மற்றும் சந்திரன் ஆகியோர்களின் குடும்பம், 6) வரதம்மாள் வகையறா ஆகியவர்கள் அடங்குவார்கள்.

3) கடந்த 23 வருடங்களுக்கு முன்பு மேற்படி குடும்பத்தினர் தாவா கோவிலுக்கு மாதம் ஒரு குடும்பம் வீதம் பூஜை செய்து வந்தனர் என்றால், சரிதான். ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் பூஜையை மட்டும் மேற்படி 6 குடும்பத்தாரும் ஆளுக்கு ஐந்து நாட்கள் வீதம் பிரித்துக்கொள்வோம் என்றால், சரிதான்.

4) அவ்வாறு மார்கழி மாதம் பொது பூஜை முடிந்த பின்பு அடுத்து வரும் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுழற்சி முறையில் மாறி வரும் என்றால், சரிதான். அவ்வாறு மார்கழி மாத பூஜை முடிந்த பின்பு எதிர்வரும் மாதங்களில் 6 மாதங்களுக்கு ஒரு முறை ஒரு மாதத்தில் வரதம்மாள் வகையறாவிற்கு 15 நாட்களும், மீதமுள்ள 15 நாட்களில் எங்கள் குடும்பத்தினருக்கும், கிருஷ்ண அய்யர் குடும்பத்திற்கும், லட்சுமண அய்யர் குடும்பத்திற்கும், சின்னய்யன் குடும்பத்திற்கும் தலா 5 நாட்கள் ஒதுக்கப்படும் என்றால், சரிதான்.

5) கிருஷ்ண அய்யர் என்பவர் என் தாத்தா. மேற்படி கிருஷ்ண அய்யரின் வாரிசுகள் திருப்பலி, சஞ்சீவி அய்யர், சின்னு அய்யர் ஆவார்கள். மேற்படி திருப்பலி, சஞ்சீவி அய்யர், சின்னு அய்யர் ஆகியோர்களுக்குதான் மேற்படி எங்கள் குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்ட 5 நாட்களில் பூஜை செய்துகொள்வார்கள் என்றால், சரிதான். அவ்வாறு ஒதுக்கப்பட்ட 5 நாட்களில் கிருஷ்ண அய்யரின் வாரிசுகளான வாதிகளாகிய எங்களுக்கு மூன்றில் ஒரு பங்குதான் உரிமை உள்ளது என்று சொன்னால், சரியல்ல.

6) ஆறு மாதங்களில் மொத்தம் இரண்டு மாதங்களில் மட்டும்தான் எங்கள் குடும்பத்திற்கு பூஜை செய்யும் உரிமை உள்ளது என்றால், சரிதான். அதில் 1 மாதத்தில் வரதம்மாள் குடும்பத்திற்கு 15 நாட்களும், கிருஷ்ண அய்யர், லட்சுமண அய்யர், சின்னு அய்யர் ஆகியோர்கள் குடும்பத்திற்கு 15 நாட்களும் உள்ளது என்றால், சரிதான். மற்றொரு மாதத்தில் கிருஷ்ண அய்யர், லட்சுமண அய்யர், சின்னு அய்யர் ஆகியோர் குடும்பத்திற்கு சம உரிமை உள்ளது என்றால், சரிதான்.

7) மேற்படி மற்றொரு மாதத்தில் ஒவ்வொருவருக்கும் தலா எத்தனை நாட்கள் என்றால், கிருஷ்ண அய்யர் குடும்பத்திற்கு 11–1/4 நாட்களும், லட்சுமண அய்யர் குடும்பத்திற்கு 11–1/4 நாட்களும், சின்னு அய்யர் குடும்பத்திற்கு 7–1/2 நாட்களும் வரும்.

8) மேற்படி மற்றொரு மாதத்தில் ஆளுக்கு தலா 10 நாட்கள் பூஜை முறை என்றாலும், நான் தற்போது வழக்கிற்காக இரு குடும்பங்களுக்கு தலா 11–1/4 நாட்களும், ஒரு குடும்பத்திற்கு 7–1/2 நாட்களும் என பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

9) மேற்படி கிருஷ்ண அய்யரின் வாரிசான எங்கள் தந்தை சஞ்சீவி அய்யருக்கு 10 நாட்களில் 3ல் ஒரு பாகம் தான் உரிமை உள்ளது என்ற நிலையில், சஞ்சீவி அய்யரின் வாரிசுகளான வாதிகளாகிய எங்களுக்கும், அதே உரிமை தான் உள்ளது என்றால், சரியல்ல.

10) இவ்வழக்கில் தாவா கோவில் செயல் அலுவலரை 5ம் பிரதிவாதியாக சேர்த்து பின் அவருக்கு எதிராக இவ்வழக்கை கைவிட்டுள்ளோம் என்றால், சரிதான். எதற்காக

5ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கை கைவிட்டுள்ளோம் என்றால், தற்போது எனக்கு சரியாக நினைவில்லை. அதேபோல் 3ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கை கைவிட்டுள்ளோம் என்றால், சரிதான்.

11) மேற்படி கண்ணையர் இவ்வழக்கின் 1 மற்றும் 2 வது பிரதிவாதிகளுக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.236/12 என்ற வழக்கை தாக்கல் செய்து, அவ்வழக்கில் கண்ணையருக்கு ஆதரவாக தீர்ப்பாணை பெற்றுள்ளார் என்றால், சரிதான். மேற்படி தீர்ப்பிற்கு பின் வாதிகளாகிய எங்களுக்கு பூஜை செய்யும் உரிமை பாதிக்கப்பட்டதால்தான் இவ்வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால், சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.236/12 என்ற வழக்கில் கண்ணையருக்கு அனுசரணையாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால், சரிதான்.

12) மேற்படி எங்கள் குடும்பங்களுக்குள் தாவா கோவிலில் பூஜை செய்வது தொடர்பாக பிரச்சனை இருந்து வரும் நிலையில் இது தொடர்பாக இந்து அறநிலை துறை இணை ஆணையரிடம் நான் ஏதேனும் முறையிட்டேனா என்றால், நான் வாய்மொழியாக பலமுறை முறையிட்டுள்ளேன். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வழக்கில் சேலம் மாவட்ட இந்து அறநிலை துறை இணை ஆணையரை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். உரிய தரப்பினரை இவ்வழக்கில் நான் சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

13) தாவா சொத்தில் பூஜை செய்யும் உரிமையில் வாதிகளாகிய எங்களுக்கு இத்தனை நாட்கள் உரிமை உள்ளது என்று கேட்டு எவ்வித விளம்புகை பரிகாரமும் கோராததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தம்பி ராஜா அய்யர் என்பவர் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்த பிரச்சனை தொடர்பாக நீதி பேராணை மனு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

14) மேற்படி நீதி பேராணை மனுவில் அசல் வழக்கு எண்.236/12 என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு உரிய தரப்பினர்களை சேர்க்காததால் நிலைக்கதக்கதல்ல

என தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால், அதுகுறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கும் உரிய தரப்பினரை சேர்க்காததால் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், அது தவறு.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.